www.freetnbooks.com

Tsi9SS

தென்காசி மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2025

-----

# வகுப்பு 9

காலம்: 3.00 மணி | **சமூக அறிவியல்** | மதிப்பெண்கள்: 100

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: 14×1=14

1) பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ............ ஆவார்.
அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ ஏரக்டஸ்
இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்

2) வடக்கில் காபூல் பள்ளத்தாக்கிலிருந்து தெற்கில் கோதாவரி வரை பரவியிருந்த வட இந்தியாவின் ............ எனப்பட்ட பதினாறு மாநிலங்களின் அரசுகளின் எழுச்சி ஏற்பட்டது.
அ) மஹாஜனபதங்கள் ஆ) கனசங்கங்கள்
இ) திராவிடம் ஈ) தட்சிணபதா

3) கிருஷ்ணதேவராயர் ............ ன் சமகாலத்தவர்.
அ) பாபர் ஆ) ஹீமாயூன் இ) அக்பர் ஈ) ஷெர்ஷா

4) பிரான்சில் அரச சர்வாதிகாரத்தின் சின்னமாக ............ இருந்தது.
அ) வெர்செயில்ஸ் அரண்மனை ஆ) பாஸ்டைல் சிறைச்சாலை
இ) பாரிஸ் கம்யூன் ஈ) ஸ்டேட்ஸ் ஜெனரல்

5) எரிமலை மேல்பகுதியில் கிண்ணம் போன்ற பள்ளமான அமைப்பினை ............ என்று அழைக்கின்றோம்.
அ) எரிமலை வாய் ஆ) துவாரம் இ) பாறைக்குழம்பு தேக்கம் ஈ) எரிமலைக் கூம்பு

6) ............ புவியின் முக்கிய ஆற்றல் மூலமாகும்.
அ) சூரியன் ஆ) சந்திரன் இ) நட்சத்திரங்கள் ஈ) மேகங்கள்

7) வளிமண்டலத்தில் உள்ள நுண்ணுயிரிகளைக் கொண்டு, ஊட்டச்சத்துக்களை மறுசுழற்சி செய்வோர்
அ) உற்பத்தியாளர்கள் ஆ) சிதைப்போர்கள்
இ) நுகர்வோர்கள் ஈ) இவர்களில் யாரும் இல்லை

8) ஒரு நிலவரைபடத்தின் கருத்து அல்லது நோக்கத்தைக் குறிப்பிடுவது
அ) தலைப்பு ஆ) அளவை இ) திசைகள் ஈ) நிலரைபடக் குறிப்பு

9) உலகிலேயே மிகப்பெரிய மக்களாட்சி நாடு ............
அ) கனடா ஆ) இந்தியா இ) அமெரிக்கா ஈ) சீனா

10) **கூற்று (A)** : உரிமைகளும் கடமைகளும் ஓர் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை.
**காரணம் (R)** : நாம் விரும்பும் மதத்தை பின்பற்றுவதற்கான உரிமை உண்டு. பிற மதத்தினர் இடையே இணக்கமான உறவை ஏற்படுத்துவதுடன் அவர்களின் உணர்வையும் மதிக்க வேண்டும்.
அ) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)க்கு சரியான விளக்கம்.
ஆ) (A) மற்றும் இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)க்கு சரியான விளக்கமல்ல.
இ) (A) சரி ஆனால் (R) தவறு.
ஈ) (A) தவறு ஆனால் (R) சரி.

11) 73வது 74வது அரசமைப்புத் திருத்தச் சட்டங்கள் இவ்வாண்டில் நடைமுறைக்கு வந்தன.
அ) 1992 ஆ) 1995 இ) 1997 ஈ) 1993

12) தமிழ்நாட்டில் ............ துறையில் அதிக நபர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.
அ) வேளாண்மை ஆ) உற்பத்தி இ) வங்கியியல் ஈ) சிறுதொழில்

13) சர்வதேச வணிகத்தில் பயன்படுத்தப்படும் நாணய முறை ............
அ) அமெரிக்க டாலர் ஆ) பவுண்டு இ) ரியால் ஈ) யென்

14) இவற்றுள் உணவல்லாத பயிர் எது?
அ) கம்பு ஆ) கேழ்வரகு இ) சோளம் ஈ) தென்னை

## II. குறுகிய வினாக்களுக்கு விடையளி: (ஏதேனும் 10) 10×2=20
**(வினா எண் 28 கட்டாய வினா)**

15) ஊக காலம் மனிதர்களைத் தன்னுணர்வும் அறிவும் உள்ளவர்களாக எப்படி மாற்றியது?
16) மும்மணிகள் - விளக்கி கூறு.
17) கான்ஸ்டன்டைனின் முக்கிய பங்களிப்பை சுட்டிக் காட்டுக.
18) பாஸ்டைன் தேநீர் விருந்தின் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.
19) புவியின் உள் அடுக்குகள் யாவை?
20) மழைப்பொழிவின் வகைகள் யாவை?
21) மக்கள் தொகை கணக்கெடுப்பு - வரையறு.
22) ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக.
23) போக்சா - வரையறு.
24) கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?

www.freetnbooks.com | FREETNBOOKS

www.freetnbooks.com



25) சூரியசக்தி என்றால் என்ன?

26) குறைந்த மதிப்பிலான நாணயங்கள் ஏன் அதிகளவு அச்சடிக்கப்பட்டன?

27) பயிர்களின் விளைச்சல் எதனைச் சார்ந்து இருக்கிறது?

28) A மற்றும் B ஆகிய இரு நகரத்துக்கு இடையேயான தூரம் 5 கி.மீ ஆகும். இது நிலவரைபடத்தில் 5 செ.மீ இடையாகக் குறிக்கப்பட்டுள்ளது. இந்த தூரத்தைக் கணக்கிட்டு பிரதி பின்ன முறையில் விடை தருக.

**III. பின்வரும் வினாக்களுக்கு விடையளி: (ஏதேனும் 10)** **10×5=50**

**கேள்வி எண்: 42 கட்டாய வினா.**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**

i) மௌரியர் காலத்தில் ஆட்சிக்கலை மற்றும் பொருளாதாரம் குறித்து கௌடில்யர் எழுதிய நூல் ............ ஆகும்.

ii) ............ என்பது ஜப்பானின் முந்தையப் பெயர் ஆகும்.

iii) உலக அமைவிட கண்டறியும் தொகுதியில் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கைக் கோள்களின் எண்ணிக்கை ............

iv) சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர் ............

v) பணப் பரிமாற்றத்தை முறைப்படுத்துகின்ற பொறுப்பு ............க்கு உள்ளது.

30) **பொருத்துக:**

| | | |
|---|---|---|
| i) முல்லை | - | கடல் அலைச்செயல் |
| ii) அமெரிக்க சுதந்திர தினம் | - | கோழி வளர்ப்பு |
| iii) ஓங்கல் | - | காடு |
| iv) வாக்களிக்கும் உரிமை | - | ஜூலை 4 |
| v) முதன்மைத்துறை | - | அரசியல் உரிமை |

31) **வேறுபடுத்துக:**

i) இன்சல்பர்க் - யார்டங்

ii) புவிமாதிரி - நிலவரைபடம்

**காரணம் கூறுக:**

வட அரைக்கோளம் நில அரைக்கோளம் என்றும் தென் அரைக்கோளம் நீர் அரைக்கோளம் என்றும் அழைக்கப்படுகின்றன.

32) தமிழகத்தின் அரசியல் சக்திகள் எந்தளவுக்குச் சங்ககால ஆட்சி அமைப்பின் மீது தாக்கம் செலுத்தின?

33) கி.பி. 1526 முதல் 1707 வரையிலான அரசியல் மாற்றங்களை விவாதி.

34) 'பிரதிநிதித்துவம் இல்லாமல் வரிவிதிப்பு இல்லை' இக்கூற்று அமெரிக்க சுதந்திரபோருக்கு எவ்வாறு வழிவகுத்தது என்பதை விளக்குக.

35) புவி உள்ளமைப்பை விவரி.

36) சூழ்நிலை மண்டலத்தின் செயல்பாடுகளை எழுதுக.

37) திசைகள் - தகுந்தபடம் வரைந்து விளக்குக.

38) மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?

39) அதிபர் மக்களாட்சி முறை, நாடாளுமன்ற மக்களாட்சி முறைக்கும் உள்ள வேறுபாட்டினை எழுதுக.

40) இந்தியாவின் சுற்றுச்சூழல் கொள்கைகளை பற்றி விளக்குக.

41) நவீன உலகில் பணப்பரிமாற்றம் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரி.

42) **கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறி:**

(i) டில்லி (ii) மதுரை (iii) வங்காளவிரிகுடா (iv) விஜயநகர் (v) தேவகிரி

**IV. பின்வரும் வினாக்களுக்கு விடையளி:** **2×8=16**

43) அ) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக. **(அல்லது)**

ஆ) புவியியல் சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க.

44) அ) **கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்:**

| | |
|---|---|
| அ) இந்தியா | ஆ) மெகல்லன் நீர்வழித்தடம் |
| இ) பசிபிக் நெருப்பு வளையம் | ஈ) சீனா |
| உ) அட்லாண்டிக் பெருங்கடல் | ஊ) பிரெய்ரி |
| எ) வடஅமெரிக்கா | ஏ) எகிப்து |

**(அல்லது)**

ஆ)

| | |
|---|---|
| அ) இமயமலை | ஆ) இந்தியப் பெருங்கடல் |
| இ) சஹாரா பாலைவனம் | ஈ) தூந்திரபகுதி |
| உ) இங்கிலாந்து | ஊ) நிலநடுக்கப்பகுதி ஒன்று |
| எ) பிலிப்பைன்ஸ் தீவுகள் | ஏ) வாஸ்கோடகாமா நீர்வழித்தடம் |

www.freetnbooks.com | FREETNBOOKS